# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA)

# தொடர்ச்சியான பயன்பாடு தொடர்பிலான கவனம்

**2025 ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி**

இலங்கை அரசினால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) தொடர்ந்தும் பயன்படுத்திவருவது குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் (CPA) தனது ஆழ்ந்த கவனத்தை செலுத்திவருகிறது. ஊடக அறிக்கைகளின்படி, அண்மையில் காஸா மீதான இஸ்ரேலின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் வகையில் சுவரொட்டிகளை ஒட்டிய குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். மேலும், அரசாங்கம் கடந்த ஐந்து மாதங்களாக இவ்வாறு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பயங்கரவாத செயல்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாத நடவடிக்கைகள் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தியுள்ளமை குறித்தும் கவனம் செலுத்தியுள்ளது. மேலும், ஒருவர் தனது கருத்தைக் வெளிப்படுத்தியதன் அடிப்படையில் கைது செய்யப்படுவதானது, கருத்து சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாட்டினை கொண்டிருப்பதற்கான உரிமையின் மீது கவனத்தை எழுப்புவதோடு பரந்த தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது.

இது ஜனாதிபதி திஸாநாயக்க மற்றும் தற்போதய அரசாங்கம் உள்ளிட்டோர் 'பயங்கரவாத தடுப்புச் சட்டம் உள்ளிட்ட அனைத்து அடக்குமுறை சட்டங்களையும் இல்லாதொழிப்பதாகவும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களின் சிவில் உரிமைகளை உறுதி செய்வதாகவும்' தமது தேர்தல் கொள்கை விளக்க உரைகளில் தெரிவித்து சான்றளித்தமைக்கு முற்றிலும் மாறுபட்ட போக்கினை கொண்டுள்ளது. ஜனாதிபதியும் அரசாங்கத்தில் உள்ள ஏனையவர்களும், கடந்த காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தால் ஏற்பட்ட துஷ்பிரயோகத்தை ஒப்புக்கொண்டுள்ளதோடு, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு குரலெழுப்பியிருந்தனர் என்பதையும் CPA சுட்டிக்காட்டுகின்றது. பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை நீக்குவதாக பலமுறை வாக்குறுதி அளித்திருந்த போதிலும், அரசாங்கம் அவர்களின் சொந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்கி, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை தொடர்ந்தும் பயன்படுத்தி வருவதானது கவலைக்குரியதாகும்.

பல தசாப்தங்களாக, CPA உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக்கோரி தொடர்ந்தும் குரல்கொடுத்து வந்தனர். இந்தச் சட்டமானது ஆரம்பத்தில் தற்காலிகமான ஒரு சட்ட ஏற்பாடாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பின்னர் இது நிரந்தரமான சட்டமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இலங்கையின் பல்வேறு தலைமுறையினரை பீதியில் கொண்டு நடத்த பயன்படுத்தப்பட்ட இச்சட்டமானது பெரும்பாலும் இன மற்றும் மத சிறுபான்மையினர், சமூக செயற்பாட்டாளர்கள், எதிர்ப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்றோருக்கு எதிராக தண்டனையின்மை கலாச்சாரத்தை ஊக்குவிக்க பயன்படுத்தப்பட்டதோடு சித்திரவதைகளை சாதாரணமயமாக்கப்படுவதனையும் இலக்காகக் கொண்ட ஒரு சட்டமாகும். இலங்கையில் இத்தகைய நடைமுறைகள் கடந்த காலத்தில் இடம்பெற்றிருந்தாலும், பயங்கரவாத தடைச் சட்டத்தை தடுத்து நிறுத்துவதையும், அதனை உடனடியாக இரத்து செய்வதையும் அரசாங்கம் தெளிவாக உறுதிசெய்ய வேண்டியுள்ளது.

மாற்று கொள்கைகளுக்கான நிலையம் | 6/5, லையர்ட்ஸ் வீதி, கொழும்பு-5, இலங்கை
தொலைபேசி: +94112081384, +94112081385, +94112081386 | தொலைநகல்: +9411 2081388 | மின்னஞ்சல் : info@cpalanka.org
இணையம் : www.cpalanka.org